**சார்பு நீதிமன்றம், இராணிப்பேட்டை**

**AS.NO.05/2019** **தேதி.**03.02.2026

இந்த நீதிமன்ற உதவியாளர் நிலை – 2 திருமதி.கலைவாணி என்பவரால் பிரமாணம் செய்விக்கப்பட்டு .............. மே.சா.1 ..................... சாட்சியின் வாக்குமூலம் 1973 ஆம் ஆண்டு 10வது சட்டத்தின் வகைமுறைகளுக்கு உட்பட்டு 2026ம் ஆண்டு 03.02.2026ம் நாளில் பதிவுச் செய்யப்பட்டது.

| | |
|---|---|
| பெயர் | திரு. கிருஷ்ணன் |
| த/பெ. | திரு.தட்சணாமூர்த்தி |
| வயது | 45/2026 |

துவக்க நேரம் 12.29 P.M

சாட்சி முன்னிலை உறுதிமொழி செய்துவைக்கப்பட்டார்.

எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை :–

1. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தை நன்கு தெரிந்து, படித்தபிறகுதான் கையெழுத்திட்டேன் என்றால் சரிதான். என் தரப்பில் நான் தாக்கல் செய்துள்ள 11ஆவணங்கள், அசல் வழக்கு எண்.**85/2015** வழக்கு தாக்கல் செய்தபிறகு தேதியிட்ட ஆவணங்களா அல்லது வழக்கு தாக்கல் செய்த தேதிக்கு முன்பான தேதியிட்ட ஆவணங்களா என்றால் இரண்டும் கலந்துள்ளது.

2. நான் தாக்கல் செய்துள்ள பிரமாண வாக்குமூலத்தில் மொத்தம் 105 வீட்டு மனைகள் என்றும் இதில் 50 மனைகள் மட்டும் பொதுஅதிகாரம் கொடுத்ததாகவும், நான் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான், இந்த பொதுதஅதிகாரம் எதற்காக கொடுக்கப்பட்டது என்றால் 50 மனைகளையும் விற்பனை செய்து கொடுப்பதற்காக பொதுஅதிகாரம் கொடுத்தேன்.

3. அதே தேதியில் மீதமுள்ள வீட்டு மனைகள் குறித்து ஒரு கௌதம் என்பவருக்கு பொதுஅதிகாரம் கொடுத்துள்ளேன் என்றால் சரிதான், எதற்காக கொடுத்தேன் என்றால் விற்பனை செய்து கொடுப்பதற்காக

பொதுஅதிகாரம் கொடுத்தேன். நான் வழக்கிற்காக பொய் சொல்கிறேன் என்றாலும், உண்மையில் 105 வீட்டு மனைகளையும் விற்பனை செய்து கொடுப்பதற்காக பொதுஅதிகாரம் ஏற்படுத்திக்கொடுத்திருந்தால் ஒரே நபருக்குத்தான் பொதுஅதிகாரம் கொடுத்திருப்பேன் என்றாலும், இரண்டு நபருக்கு ஏற்படுத்திக்கொடுக்க அவசியமில்லை என்றாலும், ஒரு ராஜன் என்பவரிடம் மறுபயன் பெற்றுக்கொண்டுதான் ராஜன் என்பவருக்கு 50 வீட்டுமனைகள் குறித்து பொதுஅதிகாரம் ஏற்படுத்திக்கொடுத்தேன் என்றாலும், சரியல்ல.

4. நான் தாக்கல் செய்துள்ள பொதுஅதிகார ரத்து பத்திரம் **(ம.த.சா.ஆ.1)** கடந்த 1995 ல் எனது தகப்பனாரால் ஏற்படுத்தப்பட்டு, எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயருக்கு கொடுக்க பொதுஅதிகாரத்தை கடந்த 2000 ல் எதிர்மனுதாரரின் தந்தை பெயரில் இருந்த பொதுஅதிகாரத்தை எனது தகப்பனார் ரத்து செய்ததற்கான பத்திரம் என்றால் சரிதான், அதற்கடுத்த ஆவணமான பொதுஅதிகார பத்திரம் கடந்த 01.03.2000 ல் நானும் எனது குடும்பத்தாரும் சேர்ந்து ஆவண எண்.51/2000 மூலம் எதிர்மனுதாரர் ராஜனுக்கு 50 வீட்டு மனைகள் குறித்து பொதுஅதிகார பத்திரம் ஏற்படுத்திக்கொடுத்தோம் என்றால் சரிதான்.

5. எனது தகப்பனார், எதிர்மனுதாரரின் தகப்பனார் பெயரில் இருந்த பொதுஅதிகாரத்தை கடந்த 2000 ல் எதற்காக ரத்து செய்தார் என்றால் சொத்து எனது தாத்தா, பாட்டி மற்றும் பெரியப்பா பெயரில் இருந்தது எனது அப்பாவிற்கு பொதுஅதிகாரம் கொடுக்க அதிகாரம் இல்லை அதனால் பொதுஅதிகாரத்தை ரத்து செய்தார். நான் சொன்ன இந்த காரணம் **ம.த.சா.ஆ.1** ல் குறிப்பிட்டு எழுதப்பட்டுள்ளதா என்றால் வரவு, செலவு கணக்குகளை காட்டவில்லை என்றும் வேறு ஏற்பாடு செய்ய இருப்பதாலும் ரத்து செய்வதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

6. கடந்த 2000 ல் எதிர்மனுதாரரின் தந்தை பெயரில் இருந்த பொதுஅதிகாரத்தை ரத்து செய்துவிட்டு, எதிர்மனுதாரரிடம் உரிய மறுபயனை பெற்றுக்கொண்டு 50 வீட்டு மனைகளுக்கு நானும், எனது குடும்பத்தாரும் எதிர்மனுதாரருடன் ஒரு பதிவு செய்யப்படாத கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொண்டோம் என்றாலும் இந்த ஆவணம் கீழமை நீதிமன்றத்தில் அசல் வழக்கில் **வா.த.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது என்றாலும் இந்த ஆவணம் குறியீடு செய்யப்பட்டதா

என்று தெரியவில்லை ஆனால் எதிர்மனுதாரருடன் கிரைய உடன்படிக்கையை ஏற்படுத்திக்கொள்ளவில்லை.

7. நான் தற்பொழுது என் தரப்பில் தாக்கல் செய்துள்ள **ம.த.சா.ஆ.2 முதல் 7** வரையான கிரைய பத்திர சான்றிட்ட நகல்களை, இந்த எதிர்மனுதாரர் கீழமை நீதிமன்றத்தில் அசல் வழக்கில் அவர் தரப்பில் ஆவணங்களாக குறியீடு செய்துள்ளார் என்றால் தெரியவில்லை. நான் தற்பொழுது என் தரப்பில் தாக்கல் செய்துள்ள **ம.த.சா.ஆ.8 முதல் 10** வரையான ஆவணங்கள் கடந்த 2016 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டதாக நான் இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றாலும் எதற்காக இந்த ஆவணங்களை தாக்கல் செய்துள்ளேன் என்றால் கடந்த 2003 ல் ராஜன் பெயரில் இருந்த பொதுஅதிகாரத்தை நாங்கள் ரத்து செய்துவிட்டோம். நாங்கள் ஏற்கனவே ரத்து செய்த பொதுஅதிகார ஆவணத்தை வைத்து ராஜன் அவரது அம்மா, தம்பி மற்றும் நண்பர்கள் ஆகியோர் பெயரில் கிரையம் செய்து கொடுத்துள்ளார். பின்னிட்டு 2015 ம் ஆண்டு இந்த அசல் வழக்கு நிலுவையில் இருந்தபொழுது கடந்த 2016 ம் ஆண்டு மறுபடியும் ராஜன் அவரது அம்மா, தம்பி, நண்பர்களிடமிருந்து பொதுஅதிகாரத்தை தன் பெயருக்கு பெற்றுள்ளார். இந்த ஆவணங்களைத்தான் நான் தற்பொழுது என் தரப்பில் தாக்கல் செய்துள்ளேன்.

8. எதிர்மனுதாரரான ராஜன் தனது தாய், தம்பி மற்றும் நண்பர்கள் மூலம் பெற்ற பொதுஅதிகார பத்திரத்தை பெற்ற பின்னிட்டு ராஜன் ஏதேனும் வில்லங்கம் செய்துள்ளாரா என்றால் தெரியவில்லை. நாங்கள் கடந்த 2000 த்தில் எதிர்மனுதாரர் ராஜனுக்கு கொடுத்த வீட்டு மனைகளின் எண்களுக்கும், கடந்த 2003 ல் மேற்படி பொதுஅதிகாரத்தை ரத்து செய்தபொழுது, ரத்து பத்திரத்தில் உள்ள வீட்டு மனைகளின் எண்களும் வெவ்வேறாகவும், ஒத்துப்போகாமலும் உள்ளது என்றால், கடந்த 2000 ல் கொடுக்கப்பட்ட பொதுஅதிகாரத்தில் உள்ள அனைத்து வீட்டு மனைகளையும் ரத்து செய்தும், ரத்து பத்திரத்தில் வீட்டு மனைகளின் எண்கள் மாறியிருக்கலாம்.

9. கடந்த 2000 ல் எனது தகப்பனார் பொதுஅதிகாரத்தை ரத்து செய்த ஆவணத்திலும், நாங்கள் 2003 ல் ரத்து செய்த பொதுஅதிகார ரத்து ஆவணத்திலும் ஏன் பொதுஅதிகாரம் ரத்து செய்யப்படுகிறது என்ற

காரணம் ஒரே மாதியாக உள்ளது என்றால், இருவருமே வரவு, செலவு காட்டவில்லை, அதனால் அவ்வாறு எழுதப்பட்டுள்ளது.

10. கடந்த 2003 ல் நாங்கள் பொதுஅதிகாரத்தை ரத்து செய்யப்போவதாக எதிர்மனுதாரருக்கு முன்கூட்டியே அறிவிப்பு எதையும் கொடுக்காததாலும், வீட்டு மனைகளின் எண்கள் வெவ்வேறாகவும், முரண்பட்டு உள்ளதாலும், நாங்கள் ரத்து செய்த பொதுஅதிகார ரத்து ஆவணம் செல்லத்தக்கதல்ல என்றால், சரியல்ல.

11. நான் தற்பொழுது தாக்கல் செய்துள்ள, எதிர்மனுதாரர் எங்களுக்கு அனுப்பிய சட்ட அறிவிப்பு **(ம.சா.ஆ.11)** எதற்காக இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேன் என்றால், நாங்கள் 2003 ல் பொதுஅதிகாரத்தை ரத்து செய்தது தெரியாது என்று ராஜன் சொன்னதாலும், அதன்பின்னிட்டு அவர் எங்களிடம் வந்து பொதுஅதிகாரத்தை ரத்து செய்ததை மீண்டும் அவர் கொடுக்கும்படி கேட்டார், நாங்கள் முடியாது என்று சொல்லிவிட்டோம். அதன்பிறகு, அவர் 2004 ல் அவரது அம்மா பெயரிலும், தம்பி பெயரிலும், நண்பர்கள் பெயரிலும் கிரையம் கொடுத்துவிட்டார். அதன்பின்னிட்டு, சட்ட அறிவிப்பு கொடுத்தார். அதனால், இந்த ஆவணத்தை தற்பொழுது வழக்கில் தாக்கல் செய்துள்ளேன்.

12. ராஜன், கடந்த 2009 ல் அனுப்பிய சட்ட அறிவிப்பு யார், யார் பெயருக்கு அனுப்பப்பட்டுள்ளது என்றால், ராஜனுக்கு யார் யாரெல்லாம் பொதுஅதிகாரம் ஏற்படுத்தி கொடுத்தோமோ, அவர்கள் அனைவரின் பெயருக்கும் சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இதில், எனது பாட்டி பெயர் இல்லை, அவர் இறந்துவிட்டார்.

13. ராஜன் அனுப்பிய இந்த சட்ட அறிவிப்பில் **(ம.சா.ஆ.11)** என்ன சங்கதி சொல்லி அனுப்பப்பட்டுள்ளது என்றால், எனது பாட்டி ராஜன் பெயருக்கு ஒரு உயில் எழுதிவைத்துள்ளதாகவும், இதில் எங்களுக்கு எந்தவித உரிமையும் இல்லை என்றும், சங்கதியை சொல்லி சட்ட அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. இந்த சட்ட அறிவிப்பில் பொதுஅதிகார பத்திரத்தை ரத்து செய்தது குறித்து ஏதேனும் வாசகம் இடம்பெற்றுள்ளதா என்றால், இல்லை.

14. நான் கடந்த 2003 ம் ஆண்டு பொதுஅதிகாரத்தை ரத்து செய்த விவரம் எதிர்மனுதாரராகிய ராஜனுக்கு தெரியாது என்றாலும், அப்படி

தெரிந்திருந்தால், பின்னிட்டு கடந்த 2009 ம் ஆண்டு அவர் அனுப்பிய சட்ட அறிவிப்பில் அது குறித்து சொல்லியிருப்பார் என்றாலும் சரியல்ல, பொதுஅதிகாரம் ரத்து செய்த விவரம் அவருக்கு தெரியும். நாங்கள் பொதுஅதிகாரத்தை ரத்து செய்த விவரம் எதிர்மனுதாரரருக்கு தெரியாது என்றாலும், இந்த சட்ட அறிவிப்பிற்கு பதில் அறிவிப்பு கொடுத்திருந்தால் நாங்கள் பொதுஅதிகாரத்தை ரத்து செய்த விவரம் தெரிந்துவிடும் என்பதால்தான் எங்கள் தரப்பில் பதில் அறிவிப்பு கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல, பதில் அறிவிப்பு கொடுக்கவில்லைதான் ரத்து செய்த விவரம் அவருக்கு முன்னாடியே தெரியும். சாட்சி மீண்டும், பதில் அறிவிப்பு கொடுக்க வழக்கறிஞர் திருஞானசம்பந்தம் என்பவரிடம் சொன்னதாகவும், வழக்கறிஞர் பதில் அறிவிப்பு கொடுத்தாரா என்று தெரியவில்லை என்று சாட்சியம் அளிக்கிறார்.

15. கடந்த 2004 ம் ஆண்டு ராஜனால் ஏற்படுத்தப்பட்ட கிரைய ஆவணங்களை நான் ரத்து செய்யாமல் என் பெயரில் கிரைய ஆவணம் ஏற்படுத்தியுள்ளது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அந்த ஆவணங்களை நான் ரத்து செய்ய முடியாது, அந்த ஆவணங்கள் செல்லாது. மேற்படி ராஜனால் ஏற்படுத்தப்பட்ட ஆவணங்களை ரத்து செய்ய நான் எந்தவித முயற்சியும் மேற்கொள்ளவில்லை என்றால் மேற்கொள்ளவில்லை.

16. கடந்த 2000 லிருந்து 2003 வரை பொதுஅதிகார பத்திரத்தின் அடிப்படையில் எதிர்மனுதாரரால் விற்பனை செய்யப்பட்ட வீட்டு மனைகளில் கிரையம் பெற்ற சில 3 ம் நபர்கள் வீட்டு மனைகளில் வீடு கட்டு குடியிருந்து வருகிறார்கள் என்றால் சரிதான். நாங்கள் பொதுஅதிகார ஆவணத்தை ராஜனுக்கு ஏற்படுத்திக்கொடுத்த நாள் முதல் இன்று வரை ராஜனின் அனுபவத்தில்தான் பொதுஅதிகாரத்தில் கண்டுள்ள சொத்துக்கள் இருந்து வருகிறது என்றாலும், அதனால்தான் இன்றுவரை நாங்கள் அவரது அனுபவத்தை தடை செய்யவில்லை என்றாலும், கடந்த 2000 லிருந்து 2003 வரை ராஜனால் விற்பனை செய்யப்பட்ட வீட்டு மனைகளை நாங்கள் உரிமை கோரவில்லை. ராஜன் அனுபவத்தில் இல்லை.

17. கடந்த 2000 ம் ஆண்டு ஏற்படுத்திக்கொடுத்த பொதுஅதிகார ஆவணத்தில் கண்டுள்ள வீட்டு மனைகளில் சில விற்பனை செய்யப்பட்ட

மனைகளில் 3ம் நபர்கள் அனுபவத்தில் உள்ளார்கள் என்றாலும் நாங்கள் அனுபவத்தில் இருந்திருந்தால் அவர்களை காலி செய்ய தனி வழக்கு தாக்கல் செய்திருப்போம் என்றாலும், இதுநாள் வரை வீடு கட்டி வசித்து வரும் நபர்களுக்கு எதிராக எந்தவொரு வழக்கையும் தாக்கல் செய்யவில்லை என்றால் பொதுஅதிகாரம் நிலுவையில் இருக்கும்பொழுது ராஜனால் முன்கூட்டியே விற்பனை செய்யப்பட்ட வீட்டு மனைகளை நாங்கள் உரிமை கோரவில்லை.

18. நாங்கள் கொடுத்த பொதுஅதிகாரத்தில் விற்பனை செய்யப்படாத வீட்டு மனைகளில் நாங்கள் அனுபவத்தில் இல்லை என்றாலும், ராஜன்தான் அனுபவத்தில் இருந்துவருகிறார் என்றாலும் சரியல்ல. ராஜன் அனுபவத்தில் இருந்த காரணத்தினாலும், நாங்கள் 2003ல் பொதுஅதிகார ஆவணம் ரத்து செய்த விவரம் ராஜனுக்கு தெரியாத காரணத்தினாலும் கடந்த 2015ம் ஆண்டு பொதுஅதிகார ஆவணம் ரத்து செய்த விவரம் தெரியவந்ததால்தான் கடந்த 2015ம் ஆண்டு ராஜன் இந்த வழக்கை தாக்கல் செய்தார் என்றாலும், கடந்த 2003ம் ஆண்டே பொதுஅதிகார ரத்து செய்த விவரம் தெரிந்திருந்தால் அசல் வழக்கை கடந்த 2004ம் ஆண்டே தாக்கல் செய்திருப்பார் என்றாலும், சரியல்ல, நாங்கள் அந்த இடத்தில் மாட்டுக் கொட்டகை கட்டி 20 மாடுகளை வைத்து குடியிருந்து வருகிறோம். நான் சொல்வது பொய் என்றாலும் நான் சொல்லும் இடத்தில் எந்தவித மாட்டுக்கொட்டகையும் இல்லை என்றாலும், நாங்கள் அங்கு குடியிருக்கவில்லை என்றாலும் சரியல்ல.

19. நாங்கள் கடந்த 2003ல் ஏற்படுத்திய பொதுஅதிகார ரத்து பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றாலும், ராஜனால் கடந்த 2004ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரங்கள் செல்லத்தக்கது என்றால் சரியல்ல. கடந்த 2004ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரங்கள் நடைமுறையில் இருக்கும்பொழுது கடந்த 2010ம் ஆண்டு என் பெயரில் ஏற்படுத்தப்பட்ட கிரைய பத்திரம் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. அதனால் எதிர்மனுதாரர், தனது அசல் வழக்கில் கோரிய அனைத்து பரிகாரங்களையும் வழங்கு உத்தரவிடவேண்டும் என்றால் சரியல்ல.

மறு விசாரணை :– இல்லை

முடிவு நேரம் 2.10 P.M

Taken down before by me in open court read over / intarpreted is the witness and Acknowleged by him/her to be correct.

Subordinate Judge,
Ranipet.